பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**03 03 2026** **7 15**

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மேற்காசியாவில் நிலவும் சூழ்நிலை குறித்து ஜோர்டான் மன்னர் திரு. அப்பதுல்லாவுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டறிந்தார்.

2. வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்க, பிரதமர் திரு. நரேந்திர மோடி தீவிரமாக செயல்பட்டு வருகிறார் என்று மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

3. வடகிழக்கு மாநிலங்களின் மேம்பாட்டிற்கு மத்திய அரசு உறுதிபூண்டிருப்பதாக இணையமைச்சர் திரு. ஜார்ஜ் குரியன் தெரிவித்துள்ளார்.

4. மேற்காசியாவில் நிலவும் பதற்றமான சூழ்நிலையால், அந்த நாடுகளுக்கு செல்லும் 357 விமானங்கள் ரத்து செய்யப்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

5. ரியாதில் உள்ள அமெரிக்க தூதரகம் மீது ஈரான், ட்ரோன் தாக்குதல் நடத்தியிருப்பதாக சவுதி அரேபியா தெரிவித்துள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

மேற்காசியாவில் நிலவும் சூழ்நிலை குறித்து ஜோர்டான் மன்னர் திரு. அப்துல்லாவுடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார்.

முன்னதாக சவுதி அரேபிய பிரதமர் திரு. முகமது பின் சல்மான், பஹ்ரைன் மன்னர் திரு. **Hamad Bin Isa Al-Khalifa** ஆகியோருடனும் பிரதமர் பேசினார்.

ஜோர்டான் மன்னர் உடனான உரையாடலின்போது அங்குள்ள மக்களுக்கு அமைதி, பாதுகாப்பு வழங்குவதில் இந்தியாவின் ஆதரவை உறுதி செய்வதாக பிரதமர் குறிப்பிட்டார்.

கடினமான தருணத்தில் அங்கு வசிக்கும் இந்திய சமூகத்தினரின் நலன்களை பாதுகாத்து வருவதற்கு, மன்னருக்கு தாம் நன்றி தெரிவித்துக்கொண்டதாக திரு. நரேந்திர மோடி சமூக வலைதளத்தில் கூறியுள்ளார்.

<<<<>>>>

மகாத்மா காந்தியின் கனவை நனவாக்கும் வகையில் வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்க பிரதமர் திரு. நரேந்திர மோடி தீவிரமாக செயல்பட்டு வருகிறார் என்று மத்திய தொழிலாளர் மற்றும்

வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று மகாத்மா காந்தி குறித்து ஆகாஷ்வாணி கூடுதல் தலைமை இயக்குநர் டாக்டர் **Dhiraj Kakadia** எழுதிய மகாத்மா காந்தி குறித்த புத்தகத்தை வெளியிட்டு அவர் பேசினார்.

காந்தியின் போதனைகளை மக்கள் தங்கள் வாழ்வில் நடைமுறைப்படுத்துவதற்கான விழிப்புணர்வை இந்தப் புத்தகம் ஏற்படுத்தும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

நாட்டு மக்களிடையே மகாத்மா காந்தியின் தேசபக்தியும், அவருடைய கொள்கைகளும் சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்க வேண்டும் என்ற உத்வேகத்தை ஏற்படுத்தியதாக அவர் தெரிவித்தார்.

காந்தியின் அகிம்சைக் கொள்கைகள் இன்றளவும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக அமைந்துள்ளது என்றும் டாக்டர் மன்சுக் மாண்டவியா குறிப்பிட்டார்.

<<<<>>>>

வளர்ச்சியடைந்த பாரதத்தை நோக்கி, வடகிழக்கு மாநிலங்களை மேம்படுத்துவதற்கு மத்திய அரசு உறுதிபூண்டிருப்பதாக சிறுபான்மையினர் நலத்துறை இணையமைச்சர் திரு. ஜார்ஜ் குரியன் தெரிவித்துள்ளார்.

நாகாலாந்து மாநிலம் **Tuensang** மாவட்டத்திற்கு இரண்டு நாள் பயணமாக சென்ற அவர், மத்திய அரசின் திட்டங்களின் செயல்பாடு குறித்து அதிகாரிகளுடன் நேற்று ஆலோசனை நடத்தினார்.

அப்போது வடகிழக்கு மாநிலங்களின் நலன்களுக்காகவும், கட்டமைப்பு மேம்பாட்டிற்கு ஆதரவு அளிக்கவும் மத்திய அரசு உத்தரவாதம் அளித்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

வடகிழக்கு மாநிலங்களின் விரைவான வளர்ச்சி குறித்து அறிந்துகொள்வதற்காக பிரதமரும், மத்திய அமைச்சர்களும் அவ்வப்போது ஆய்வு மேற்கொண்டு வருவதை திரு. ஜார்ஜ் குரியன் சுட்டிக்காட்டினார்.

<<<<>>>>

தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள புத்தகங்கள், தமிழின் தொன்மையையும், பண்பாட்டு வளத்தையும் உலகறியச் செய்யும் முயற்சி என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

குடியரசுத்தலைவர் மாளிகையில் நேற்று நடைபெற்ற தமிழறிஞர்களின் **14** தமிழ்ப் புத்தகங்கள் வெளியீட்டு விழாவில் தாம்

பங்கேற்றது குறித்து சமூக வலைதளப் பதிவில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழ் மொழி மற்றும் பண்பாட்டின் மீது பிரதமர் கொண்டுள்ள ஆழ்ந்த பற்றையும், மரியாதையையும் மீண்டும் ஒருமுறை எடுத்துக்காட்டும் வகையில் இந்த புத்தகங்கள் வெளியீடு அமைந்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

தமிழறிஞர்கள், இலக்கியம் மற்றும் கலாச்சாரத்தின் மீது மத்திய அரசு வைத்துள்ள அசைக்க முடியாத அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதாகவும் புத்தக வெளியீடு அமைந்திருப்பதாக டாக்டர் எல். முருகன் அதில் கூறியுள்ளார்.

<<<<>>>>

மேற்காசியாவில் நிலவும் பதற்றமான சூழ்நிலைக்கு மத்தியில் 357 விமானங்கள் ரத்து செய்யப்பட்டிருப்பதாக மத்திய விமான போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அந்தப் பிராந்தியத்தில் பயணிகளுக்கு ஏற்ற சூழல் தொடர்பான நிலைமையை உன்னிப்பாக கண்காணித்து வருவதாக சமூக வலைதளப் பதிவில் அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பயணிகள் உதவி கட்டுப்பாட்டு அறை மூலமாக விமானப் பயணிகளின் கோரிக்கைகள் கேட்டறியப்பட்டு வருவதாகவும், உரிய நேரத்தில் முன்னுரிமை அடிப்படையில் அவை தீர்க்கப்பட்டு வருவதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

ஏர்சேவா என்ற சமூக ஊடக தளம் மூலமாக இதுவரை பயணிகளின் 559 கோரிக்கைகள் தீர்க்கப்பட்டிருப்பதாகவும், பிரத்யேக உதவி அழைப்பு எண்கள் மூலமாகவும் விமான நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்தும் பயணிகளின் கோரிக்கைகள் தீர்க்கப்பட்டு வருவதாக அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

விமானங்கள் ரத்து மற்றும் நேர மாற்றம் தொடர்பான சரியான தகவல்களை விமான நிறுவனங்களின் அதிகாரபூர்வ தொலைபேசி எண்கள் மூலம் பயணிகள் அறிந்துகொள்ள வேண்டும் என்று விமானப் போக்குவரத்து அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

<<<<>>>>

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்தாலும் இந்தியாவில் பெட்ரோல் மற்றும் டீசல் விலையில் எந்த மாற்றமும் இல்லை என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

ஈரான் மீதான இஸ்ரேல் மற்றும் அமெரிக்க தாக்குதலால் கச்சா எண்ணெய் விலை உயர்ந்துள்ள நிலையில், இந்தியாவில் பெட்ரோலியப் பொருட்களின் விலையை உயர்த்தும் திட்டமில்லை என்று மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

ரியாதில் உள்ள அமெரிக்க தூதரகம் மீது ஈரான், ட்ரோன் தாக்குதல் நடத்தியிருப்பதாக சவுதி அரேபியா தெரிவித்துள்ளது.

இரண்டு ட்ரோன்கள் அமெரிக்க தூதரகத்திற்கு அருகே தாக்குதலில் ஈடுபட்டதாகவும், இதன் காரணமாக லேசான தீ விபத்தும் பாதிப்பும் ஏற்பட்டதாகவும் சவுதி அரேபிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அந்தப் பகுதியில் பலத்த சத்தத்துடன் கரும்புகை ஏற்பட்டதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஈரான் மீதான அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நாடுகளின் வான்வழி தாக்குதலுக்கு பதிலனடியாக இந்தத் தாக்குதல்ந நடத்தப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஈரானின் மொத்தமுள்ள 31 மாகாணங்களில் 24 மாகாணங்களில் அமெரிக்க படையுடன் இணைந்து ஆயிரத்து 200க்கும் மேற்பட்ட வெடிகுண்டுகள் வீசப்பட்டதாக இஸ்ரேல் விமானப்படை தெரிவித்துள்ளது.

இதற்கு பதிலடியாக பஹ்ரைன், ஈராக், ஜோர்டான், குவைத் உள்ளிட்ட 9 நாடுகளின் மீது ஈரான் தாக்குதலை நடத்தியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படையினரின் கூட்டுத் தாக்குதலில் 555 பேர் உயிரிழந்ததாக அந்த தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

மினாப் என்ற இடத்தில் உள்ள தொடக்கப்பள்ளியில் நடத்தப்பட்ட மிக மோசமான தாக்குதலில் 180 சிறுமிகள் உயிரிழந்திருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

இதனிடையே அமெரிக்க குண்டுவீச்சில் காயமடைந்த ஈரான் உயர்தலைவர் ஆயத்துல்லா அலி கமேனியின் மனைவி உயிரிழந்ததாக ஈரான் அரசு தெரிவித்துள்ளது.

இஸ்ரேலில் ஈரானின் ஏவுகணை தாக்குதலில் 9 பேர் உயிரிழந்திருப்பதாகவும், 20க்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குவைத்தில் ஈரான் நடத்திய தாக்குதலி அமெரிக்க வீரர்கள் 4 பேர் கொல்லப்பட்டதுடன் 5 பேர் காயமடைந்திருப்பதாக ஈரான் தெரிவித்துள்ளது.

இதேபோல் ஈராக் ராணுவ தளத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் 2 பேர் கொல்லப்பட்டதாகவும், 5 பேர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குவைத்தில் நடத்தப்பட்ட ட்ரோன் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார். 32 பேர் காயமடைந்தனர்.

லெபனானில் இஸ்ரேல் படையினருக்கு எதிராக ஹெஸ்புல்லா அமைப்பினர் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து, இஸ்ரேல் பதில் தாக்குதலை நடத்தியது.

இதில் 52 பேர் உயிரிழந்ததுடன் 154 பேர் காயமடைந்ததாக லெபனான் சுகாதாரல அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஹெஸ்புல்லா ராணுவ நடவடிக்கைகளுக்கு லெபனான் அரசு தடை வித்துள்ளது.

தொடர்ந்து நடைபெறும் மோதல்களால் மேற்காசியாவில் பதற்றம் நீடித்து வருகிறது.

<<<<>>>>

தமிழகத்தில் ஒன்று முதல் ஒன்பதாம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு ஆண்டு இறுதித் தேர்வுகளை ஏப்ரல் இரண்டாவது வாரத்திற்குள் முடிக்க மாநில அரசு திட்டமிட்டுள்ளது.

தமிழகத்தில் நடப்பு கல்வியாண்டுக்கான பிளஸ்-2 தேர்வு வரும் 26ஆம் தேதியும், பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு ஏப்ரல் 6ஆம் தேதியும் நிறைவடைய உள்ளன.

சட்டப்பேரவைத் தேர்தலை கருத்தில் கொண்டு இதர வகுப்புகளுக்கான தேர்வுகளை ஏப்ரல் இரண்டாம் வாரத்திற்குள்

முடிக்க திட்டமிட்டிருப்பதாக பள்ளிக் கல்வித்துறை அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

ஆல் இங்கிலாந்து ஓபன் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

பர்மிங்ஹாமில் நடைபெறும் இப்போட்டியில் இந்தியாவின் முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

**<<<<The End>>>>**